12.09.2017

தினமலர்

## 23,000 கன அடியாக மேட்டூர் நீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர்காவிரி நீர்பிடிப்பு பகுதியில் :, தீவிரமடைந்த பருவமழையால், மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று மாலை , வினாடிக்கு, 23 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது . காவிரி நீர்பிடிப்பு பகுதியில் , பருவமழை நீடிப்பதால் , நேற்று, கர்நாடகாவின், கே.எஸ்.ஆர்., அணைக்கு, 12 ஆயிரம் கன அடி நீர் , கபினிக்கு, 7,000 கன அடி நீர் வந்தது இரு அணைகளில் இருந்தும் ., வினாடிக்கு, 8,000 கன அடி நீர் , காவிரியில் திறக்கப்பட்டு உள்ளது . கே.எஸ்.ஆர்., அணைக்கு கீழே , தமிழக கர்நாடக எல்லை - பகுதியிலுள்ள, காவிரி நீர் பிடிப்பு பகுதியில் , பருவமழை தீவிரமடைந்து உள்ளது . இதனால், நேற்று காலை , வினாடிக்கு, 20 ஆயிரத்து, 179 கன அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து , மாலை, 23 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது நேற்று. அணை நீர்மட்டம், 75 அடியாகவும், நீர் இருப்பு, 37.39 டி.சி.எம்.,யாகவும் உயர்ந்தது.

## பவானிசாகர் 67 அடியை கடந்தது

பவானிசாகர் ஈரோடு மாவட்டம் :, பவானிசாகர் அணை நீர்ப்பிடிப்பு பகுதியான , நீலகிரி மாவட்ட மலை பகுதிகளில் , பருவமழை தீவிரமடைந்துள்ளது இதனால் . . அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது நேற்று முன்தினம் , 2,212 கன அடியாக இருந்த வரத்து , நேற்று, 3,961 கன அடியாக அதிகரித்தது நீர்மட்டம் ., 67 அடியை கடந்ததுஒன்பது நாளில் ., நீர்மட்டம், கூ அடி உயர்ந்துள்ளது.

தினமணி

## வெப்பச் சலனம்: தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு

வெப்பச் சலனத்தின் காரணமாக தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தென்மேற்குப் பருவமழையானது அண்டை மாநிலங்களில் தீவிரமடைந்துள்ளது. அதன் காரணமாக வானிலையில் ஏற்படும் மாற்றம் , வெப்பச்சலனத்தின் காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. இது தொடர்பாக வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: வெப்பச் சலனத்தின் காரணமாக தமிழகம் , புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யும் என்று தெரிவித்தனர். திங்கள்கிழமை காலை வரை பதிவான மழை நிலவரம் (மி.மீட்டரில்): குன்னூர் - 110, பெரம்பலூர், மேட்டுப்பாளையம் - 50, திண்டுக்கல், திருவாரூர், பெரம்பலூர் மாவட்டம் வெண்பாவூர் , திருவாரூர் மாவட்டம் கொடவாசல் - 40.

தினகரன்

ஒரு புதிய அனுபவம்

## பவானிசாகர் அணையின் நீர்வரத்து அதிகரிப்பு

ஈரோடு பவானிசாகர் அணையின் நீர்வரத்து :1,343 கன அடியில் இருந்து 5,227 கன அடியாக அதிகரித்துள்ளது அணையின் நீர்மட்டம் .68.51 அடியாகவும், நீர்இருப்பு 10 டி அணையில் இருந்து நீர் வெளியேற்றம் . சியாகவும் உள்ளது.எம்.30 கன அடியாக உள்ளது சத்தியமங்களம் நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த கனமழையால் அணையின் . .நீர்மட்டம் உயர்ந்து வருகிறது

## 11 நாட்களுக்கு பின் கடலுக்கு சென்ற பாம்பன் மீனவர்கள் டன் கணக்கில் சிக்கியது கனவாய் மீன்கள்

ராமேஸ்வரம் மீன்களுக்கு போதிய விலை கிடைக்காமல் நஷ்டத்தை சந்தித்ததால் :, ராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் பகுதி மீனவர்கள் கடலுக்கு செல்வதையே தவிர்த்து வந்தனர் .11 நாட்களுக்கு பிறகு நேற்று முன்தினம் , 100க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் பாம்பன் மீனவர்கள் மன்னார் வளைகுடா கடலில் மீன் பிடிக்க சென்றனர்.



இரவு முழுவதும் மீன் பிடித்த மீனவர்கள் நேற்று கரை திரும்பினர் பாம்பன் .
தெற்குவாடி கடற்கரை வந்து சேர்ந்த படகுகளில் டன் கணக்கில் கனவாய் மீன்கள்
நல்ல விலை கிடைத்ததால் நஷ்டம் இல்லை என்று .சிக்கியிருந்ததுமீனவர்கள்
மகிழ்ச்சி தெரிவித்தனர்.